மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. அரசு இது பற்றி ஆராயலாம்.

திரு. வே. கு. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது ஒரு குழந்தை பிறந்தால் அதை உடனடியாகப் பதிவு செய்வதைப் போல், ஒருவர் திருமணம் செய்தால் கட்டாயமாக ரிஜிஸ்டர் ஆபீசில் பதிவு செய்ய வேண்டுமென்ற திருத்தத்தை அரசு கொண்டு வர முன்வருமா ? காரணம், ஒருவர் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொண்டு ஏமாற்றி, வேறொரு பெண்ணைத் திரு மணம் செய்கின்ற நிகழ்ச்சி நடக்கின்றது. ஆகவே, அதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிப் பலர் பல தடவை வலி யுறுத்தி வருகிறார்கள். அது பற்றி நாம் யோசனை செய்ய லாம்.

உப்பிலியாபுரத்தில் சூரிய ஒளி மூலம் மின்சாரம்.

158—(*வினா எண். *7314* **திருமதி இரா. சரோஜா** : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்டம் உப்பிலியாபுரம் தொகுதிக்கு சூரிய ஒளி மூலம் மின்சாரம் வழங்கும் திட்டம் அரசு பரிசீ லனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அவை எந்தெந்த கிராமங்களில் அமல் செய்யப்படும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திருமதி இரா. சரோஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியின் மூலம் கிடைக்கும் மின்சாரம் நீண்ட நாளைக்குப் பழுதின்றி செயல்படக் கூடியதா ? நீர் மின் சக்தி மற்றும் அனல் மின் சக்தியினால் கிடைக்கும் மின்சாரம், சூரிய ஒளியின் மூலம் கிடைக்கும் மின்சாரம், இவற்றில் சூரிய ஒளியின் மூலம் கிடைக்கும் மின்சாரம் சிக்கனமா ? அப்படி யானால் ஒரு மின் இணைப்புக்கு ஆகும் செலவு என்ன என்பதை ஈன் அறிய விரும்புகிறேன்.

1986 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரிய ஒளியைப் பயன்படுத்தி விளக்குகள் கொல்லிமலை, கல்வராயன் மலை போன்ற பகுதிகளில் போடப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தொகுதியில் எல்லா கிராமங்களிலும் மின் விளக்குகள் பொருத்தப்பட்டு இணைப்பு கொடுக்கப்பட்டதால்தான், சூரிய ஒளியிலிருந்து மின்சார விளக்கு போட உத்தேசம் இல்லையென்று பதில் சொன்னேன்.

திரு. சி. பழனிமுத்து : தலைவரவர்களே, சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிற கீழ்நாட்டில் மண்ணூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இரண்டு, மூன்று கிராமங்களில் மின் விளக்குகள் சரியாக எரியவில்லை. இரவு 8 மணி முதல் காலை 2 மணி வரையில் அதாவது 6 மணி நேரம் தான் மின் விளக்குகள் எரிகின்றன. அதன் பிறகு விளக்குகள் எரியவில்லை. ஆகையால் போடப்பட்ட சில மாதங்களில் திரும்பக் கழற்றி வந்துவிட்டார்கள். ஆகவே சூரிய ஒளியிலிருந்து மின்சார விளக்குகளுக்கு மின் இணைப்பு கொடுத்திருப்பதை மாற்றிவிட்டு, மற்ற இடங்களில் கொடுக்கப் பட்டிருப்பதைப் போல மின் இணைப்பு கொடுக்க அரசு முன்வருமா

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே சூரிய ஒளி மூலம் எரிய வைக்கப்படுகின்ற மின் விளக்குகளால் கொஞ்ச மாதம் ஆனவுடன் இப்படிப்பட்ட கஷ்டங்கள் ஏற்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது உண்மை. ஆகவே, அந்தக் குறைபாட்டை நீக்கி, மின்சார இணைப்பு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திருமதி இரா. சரோஜா : தலைவரவர்களே, பச்சை மலைப் பகுதியில் வானாடு, கோம்பை ஆகிய பகுதிகளில் சூரிய ஒளியைப் பயன்படுத்தி கொடுக்கப்பட்டிருக்கிற மின் விளக்குகள் எரியவில்லை. அதை அறிந்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மற்றப் பகுதிகளில் கொடுக்கப்பட்டிருப்பதைப் போல் மின் இணைப்புக் கொடுக்க ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, பச்சைமலைப் பகுதியில் இந்தக் குறைபாடு இருந்தால் விரைவில் மின் இணைப்புக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

Contract of Electricity Board in Tamil Nadu

159—(*Q. No. 7364—)THIRU M. SUNDARA DOSS: Will the Hon. the Minister for Tourism, Prohibition and Electricity be pleased to state—

(*a*) whether contracts for consultancy services has been given to Messrs Tatas by Tamil Nadu State Electricity Board for their North Madras and Tuticorin Projects ; and

(*b*) the methods adopted to select them ?